Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari 9444 288784
Dr Sathish Rajkumar 9445 401793
Dr Shanthi R 9884 650945
Dr Salina R 87780 87742
Dr Praveena E 9944 100443

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, அக்டோபர் 10, 2026 | இதழ் 180

## அரசியல், தனி மனித நாகரிகத்திற்கு கிடைத்த வெற்றி - முதல்வர் விஜய்

சென்னை, 10 அக்டோபர் 2026: மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத் தேர்தலில் தவெக வேட்பாளர்கள் வெற்றி பெற்ற நிலையில் இதற்கு நன்றி தெரிவித்து முதல்வர் விஜய் வெளியிட்ட அறிக்கை:

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத் தேர்தல் முடிவு வெளிவந்துவிட்டன. மக்கள் மனத்தில் தவெகவுக்கு இருக்கும் முதன்மைச் சக்திக்கான முதலிடமும், நமது மனசாட்சி உள்ள மக்களாட்சி மீதான நம் சொந்தங்களின் ஆழ்மன விருப்பமும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு உள்ளன.

வாக்குகளுக்கு ஒரு பைசா கொடுக்காமல், யாரையும் பட்டியில் அடைத்து அவமானப் படுத்தாமல், திருமங்கலம், ஈரோடு கிழக்கு பார்முலா என்று எந்த பார்முலாவும் இல்லாமல் அன்பு, பாச, உறவு பார்முலா மற்றும் ஜனநாயகம் காக்கும் பார்முலாவை வைத்து வென்ற தேர்தல் இது.

தமிழகம், ஊழல் சக்திகளின் கோட்டை இல்லை. மாறாக, மாபெரும் மக்கள் சக்தியின் கோட்டை, மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்ற அன்பு மிக்க தூய சக்தியின் கோட்டை என்பதை நிரூபித்துள்ளது. தமிழக இடைத்தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், பணநாயகச் சூத்திரத்தை அடித்து நொறுக்கிப் பெற்றுள்ள வெற்றியே இது. கண்ட கண்ட பேரங்கள் நடந்ததாக அவதூறு பேசிய மிருகக் குணப் பேச்சுக்கு எல்லாம் மக்கள் தகுந்த பதிலடியை தரமாக தந்துள்ளனர். அப்படிப் பேசியவர்களை மக்கள் வெகு தூரத்தில் ஒதுக்கி வைத்து, அவர்கள் மனத்தில் மீண்டும் தோல்வி பாரத்தை ஏற்றி உள்ளனர்.

இரண்டு தொகுதிகளிலும் நாம் இரண்டு நாள்கள் பிரசாரம் மேற்கொண்டதை நக்கலாகவும் நையாண்டியாகவும் பேசியவர்களுக்குத் தான் இப்போது மக்கள் பதிலடி தந்துள்ளனர். இதேபோல கடந்த ஏப்ரல் மாதம் நடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும், தமிழகம் முழுக்கப் பிரசாரம் செய்ய அன்றைய தீய சக்தி திமுக நம்மை அனுமதித்து இருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை மக்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும்.

நம்மைப் பொறுத்த வரை, என்றைக்கும் நாம் மக்கள் பக்கம்தான் நிற்போம். மக்களோடு மக்களாகத்தான் இரண்டறக் கலந்து இருப்போம். அது நம் கடமை மட்டுமன்று. மக்களுக்கான நமது நன்றிக் கடன் அது. எப்போதும் நம் தமிழக மக்களுக்காக முழு மூச்சுடன் நன்றி விசுவாசத்துடனேயே இருப்போம் என்பது நூறு சதவீதம் உறுதி.



இந்த வேளையில், மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ள நம் சொந்தங்கள் அனைவருக்கும் உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, உறவாக நன்றி சொல்வதில் மனம் மகிழ்கிறேன். நெஞ்சம் நெகிழ்கிறேன்.

இந்த வெற்றி, தனிப்பட்ட இந்த விஜய்யின் வெற்றியோ, தனிப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றியோ அல்ல. இது முழுக்க முழுக்கப் பெண்கள் மீதான அவதூறு பேச்சுக்கு எதிரான வெற்றி. தரம் தாழ்ந்த வகையில் நடத்தப் பட்ட தனிப்பட்ட தாக்குதலுக்கு எதிரான வெற்றி. அப்பழுக்கற்ற தலைவர்களுக்கும் அவர்களின் தொண்டர்களுக்கும் செய்த துரோகத்திற்கு எதிரான வெற்றி.

மொத்தத்தில், அரசியல் நாகரிகத் திற்குக் கிடைத்த வெற்றி. தனிமனித நாகரிகத்திற்குக் கிடைத்த வெற்றி. எல்லாவற்றுக்கும் மேலாக மக்களுக்குக் கிடைத்த வெற்றி. வாக்காளர்களுக்குக் கிடைத்த வெற்றி. இது இனிமேலும் தொடரும். தொடர்ந்தேதான் தீரும். மீண்டும் மீண்டும் இனிவரப் போகும் வெற்றிகளுக்கும் சேர்த்து இப்போதே நன்றி.

இவ்வாறு அந்த அறிக்கையில் முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

## மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சிங்கப்பூர் பயணம்

சென்னை, 10 அக்டோபர் 2026: மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இன்று முதல் (2026 அக்டோபர் 9) வரும் 11-ம் தேதி வரை சிங்கப்பூருக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின் போது, அவர், சிங்கப்பூரைச் சேர்ந்த தலைவர்கள், தொழில் நிறுவனங்களின் யூலைவர்கள், முதலீட்டாளர்கள் ஆகியோருடன் உயர்மட்ட ஆலோசனைகளை நடத்தவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது திருமதி நிர்மலா சீதாராமன், சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முகரத்தினம், சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் வோங், சிங்கப்பூர் துணைப் பிரதமர் திரு கான் கிம் யோங், சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோரைச் சந்திக்கிறார்.

இந்தக் கலந்துரையாடல்கள், இந்தியா-சிங்கப்பூர் விரிவான உத்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதோடு, வர்த்தகம், முதலீடு, டிஜிட்டல் நிதி சேவைகள், மூலதனச் சந்தைகள், வரிவிதிப்பு, குறைக்கடத்திகள், மேம்பட்ட உற்பத்தி, திறன் மேம்பாடு, விமானப் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கும்.

சிங்கப்பூரில் உள்ள முதலீட்டாளர்களுடனான தமது சந்திப்புகளின் ஒரு பகுதியாக, மத்திய நிதியமைச்சர், ஒரு வட்டமேசை மாநாட்டில் பங்கேற்கிறார். முன்னணி சர்வதேச முதலீட்டாளர்கள், நிதி நிறுவனங்கள், வணிகத்



தலைவர்கள் ஆகியோருடன் அவர் கலந்துரையாடுகிறார். இந்தக் கலந்துரையாடல், இந்தியாவின் வளர்ச்சிப் பாதை, முதலீட்டு வாய்ப்புகள், மாறிவரும் உலகப் பொருளாதார, நிதிச் சூழல் குறித்து முன்னணி உலகளாவிய முதலீட்டாளர்களுடன் கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு வாய்ப்பை வழங்கும்.

## வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான நிர்வாகம் குறித்த கட்டுரையைப் பிரதமர் பகிர்ந்துள்ளார்

சென்னை, 10 அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி, தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா எழுதிய ஒரு கட்டுரையை நேற்று (09.10.2026) பகிர்ந்துள்ளார்.

தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சேவைக்கும், எதிர்காலத்தின் எதிர்பார்ப்புகளை நனவாக்குவதற்கான தீர்மானத்திற்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி கொண்டுள்ள அர்ப்பணிப்பை அவரது 25 ஆண்டுகால பொது வாழ்க்கை பிரதிபலிக்கிறது என்பதை அந்தக் கட்டுரை எடுத்துக் காட்டுகிறது.

தில்லியின் ஆளுகைக்கான முக்கிய அம்சங்களை எடுத்துரைத்துள்ள திருமதி ரேகா குப்தா, மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்து, 2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தேசிய இலக்கிற்குப் பங்களிக்கும் ஒரு வளர்ச்சியடைந்த தில்லியைக் கட்டமைப்பதே அரசின் தொலைநோக்குப் பார்வை என்று வலியுறுத்துவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"பிரதமர் திரு நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால பொது வாழ்க்கை, இன்றைய தேவைகளுக்கான சேவையையும் நாளைய எதிர்பார்ப்புகளுக்கான தீர்மானத்தையும் ஒன்றிணைக்கிறது, என தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா எழுதியுள்ளார்.



நலத்திட்டங்களை கடைநிலை மக்களிடம் கொண்டு சேர்ப்பது முதல் கல்வி, சுகாதாரம், திறன் மேம்பாடு போன்ற பணிகளைச் செய்வது வரை, தில்லியின் நிர்வாகத்திற்கான அம்சங்களை அவர் முன்வைத்துள்ளார். 2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியாவின் ஒரு முக்கிய அங்கமாக வளர்ச்சியடைந்த தில்லியைக் கட்டமைப்பதே இதன் இலக்கு ஆகும்."

## நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்கு பிரதமர் மோடி பெயர் வைக்க உ.பி அமைச்சரவை ஒப்புதல்.. முதல்வர் யோகி அறிவிப்பு!

சென்னை 10, அக்டோபர் 2026: உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்குப் பிரதமர் நரேந்திர மோடியின் பெயரைச் சூட்டுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அம்மாநிலத்தின் முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.

கௌதம் புத்த நகர் மாவட்டத்தின் ஜெவார் பகுதியில் அமைந்துள்ள இந்த விமான நிலையம், டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு இணையாக, தேசிய தலைநகர் பிராந்தியத்தின் (என்சிஆர்) இரண்டாவது வணிக மையமாகச் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு புதிய கிரீன்ஃபீல்டு விமானப் போக்குவரத்துத் திட்டமாகும்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2001-ஆம் ஆண்டு குஜராத் முதல்வராக பொறுப்பேற்றது முதல், தற்போது நாட்டின் பிரதமராக தொடர்ந்து 25 ஆண்டுகள் தடையற்ற மக்கள் சேவையாற்றியுள்ளாரென தெரிவித்துள்ள முதல்வர் யோகி ஆதித்யநாத், அவரது இந்த மகத்தான




சாதனையை போற்றும் வகையில் அமைச்சரவையில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியால் மார்ச் மாதம் தொடங்கி வைக்கப்பட்ட இந்த விமான நிலையம், தேசிய தலைநகர் பிராந்தியத்தின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாகும். இதன் முதற்கட்டப் பணிகளில் ஒரு ஓடுபாதை மற்றும் ஆண்டுக்கு 1.2 கோடி பயணிகள் வரை கையாளக்கூடிய திறன் கொண்ட பயணிகள் முனையம் ஆகியவை அடங்கும்.

மேலும், 2050-ஆம் ஆண்டிற்குள் பல ஓடு பாதைகளுடன் விரிவுபடுத்தப்பட்டு, ஆண்டுக்கு 7 கோடி பயணிகள் வரை கையாளும் வகையில் இந்த விமான நிலையம் மேம்படுத்தப் படவுள்ளது.

## அமெரிக்காவில் இடைத்தேர்தல் ஈரான் மீது மீண்டும் தாக்குதல் நடத்த அதிபர் டிரம்ப் உத்தரவு

சென்னை 10, அக்டோபர் 2026: அமெரிக்காவில் விரைவில் இடைத் தேர்தல் வரவுள்ள நிலையில், ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கான ராணுவத் திட்டங்களைத் தயாரிக்குமாறு பென்டகனிடம் வெள்ளை மாளிகை கேட்டுக்கொண்டுள்ளது. கடந்த 8 மாதங்களாக நடைபெற்று வரும் அமெரிக்க-ஈரான் போரினால் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து, அமெரிக்காவில் பெட்ரோல் விலை கடுமையாக அதிகரித்துள்ளது.

இதனால் அதிபர் டிரம்பின் மக்கள் ஆதரவு 32 சதவீதமாகச் சரிந்துள்ளது. தேர்தலுக்கு முன்பாகத் தனது ராணுவப் பலத்தைக் காட்டி, மக்களின் எதிர்ப்பைக் குறைக்கவே டிரம்ப் இந்தத் தாக்குதல் திட்டத்தை யோசித்து வருகிறார்.

ஆனால், மீண்டும் தாக்குதல் நடத்தினால் பெட்ரோல் விலை மேலும் உயரும் என்று வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.



ஒருபுறம் மறைமுக பேச்சுவார்த்தை நடந்தாலும், டிரம்பின் இந்த அதிரடி நகர்வு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் மட்டுமின்றி இஸ்ரேலிலும் விரைவில் பொதுத் தேர்தல் நடக்க உள்ளது. எனவே தேர்தலை கருத்தில் கொண்டு, அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து விரைவில் ஈரான் மீது மீண்டும் பயங்கர தாக்குதலை நடத்தக் கூடும் என அஞ்சப்படுகிறது.

# சவுதி நெருக்கடி: இந்தியத் தூதரகம் உதவி எண்ணை வெளியிட்டது; குடிமக்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தல்



சென்னை 10, அக்டோபர் 2026: சவுதி அரேபியாவில் அதிகரித்து வரும் பாதுகாப்பு நெருக்கடிக்கு மத்தியில், அங்கு வசிக்கும் இந்தியக் குடிமக்களின் பாதுகாப்பு குறித்து ரியாத்தில் உள்ள இந்தியத் தூதரகம் மிக முக்கியமான அவசர வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது. தற்போதைய சூழலில், சவுதி அரேபியாவில் வசிக்கும் பெருமளவிலான இந்தியச் சமூகம் மிகுந்த விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறு தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

அதிகாரப்பூர்வ பாதுகாப்பு வழிகாட்டுதலில், அனைத்து இந்தியக் குடிமக்களும் அவசியமான காரணங்களுக்காகத் தவிர மற்ற நேரங்களில் வெளியே செல்வதைத் தவிர்க்குமாறும், தங்கள் பாதுகாப்பிற்காக வீட்டிற்குள்ளேயே இருக்குமாறும் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாதுகாப்புச் சூழலின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, சவுதி அரேபியாவில் சமீபத்திய நிகழ்வுகள், ராணுவ நடவடிக்கைகள் அல்லது வெடிவிபத்துகள் தொடர்பான வீடியோக்கள், புகைப்படங்கள் அல்லது உறுதிப்படுத்தப்படாத செய்திகளை சமூக ஊடகங்களில் பகிரவோ அல்லது மறுபதிவு செய்யவோ வேண்டாம் என்று தூதரகம் குடிமக்களிடம் சிறப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எந்தவொரு தவறான தகவலையும் பரப்புவதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள தூதரகம், உள்ளூர் சவுதி அதிகாரிகளால் அதிகாரப்பூர்வ வழிகள் மூலம் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்களை மட்டுமே நம்புமாறு குடிமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பாதுகாப்புச் சூழல் மோசமடைந்து வரும் நிலையில், வியாழக்கிழமையன்று சவுதி தலைநகர் ரியாத்தில் பல வெடிச்சத்தங்கள் கேட்டதாகத் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வெடிவிபத்துகளுக்குச் சற்று முன்பு, சவுதி அரேபியாவின் அபா சர்வதேச விமான நிலையம் மற்றும் ரியாத்தில் உள்ள கிங் காலித் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றை குறிவைத்து ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்ட தீவிர சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வந்தன; இதில் பல உயிரிழப்புகள் ஏற்பட்டன. பிராந்திய அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள இத்தாக்குதல்களை இந்திய அரசு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் ரியாத்தில் உள்ள இந்தியத் தூதரகம் ஆகியவை நிலைமையை தொடர்ந்து கண்காணித்து வருகின்றன. வளைகுடா நாட்டில் வசிக்கும் லட்சக்கணக்கான இந்தியர்களுக்கு உதவவும், எந்தவொரு அவசரநிலைக்கும் பதிலளிக்கவும், 'பிரவாசி பாரதிய சகாயதா கேந்திரா' 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா உதவி எண் (80024 71234) பயன்பாட்டில் உள்ளதாகத் தூதரகம் அறிவித்துள்ளது. நெருக்கடியான நேரங்களில் தேவையான தூதரக மற்றும் செயல்பாட்டு உதவிகளை உடனடியாகப் பெற இந்தியக் குடிமக்கள் இந்த எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

# உலகத் திறன் போட்டியில் பங்கேற்ற இந்திய அணியின் பிரதிநிதிகளுடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடினார்



சென்னை 10, அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி, நேற்று (09.10. 2026) தமது இல்லத்தில், ஷாங்காய் 2026 உலகத் திறன் யோட்டியில் பங்கேற்ற, இந்திய அணியின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலின் போது, பங்கேற்பாளர்கள் போட்டியில் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். உலக அரங்கில் தங்களது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் பெருமிதம் கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர். சர்வதேசப் போட்டியின் போது புதிய கருவிகள், மென்பொருள்கள், தொழில்நுட்ப அமைப்புகள், பணி நடைமுறைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்வது குறித்து பங்கேற்பாளர்கள் விவரித்தனர்.

உலக அரங்கில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய பங்கேற்பாளர்களுக்குப் பிரதமர் வாழ்த்துத் தெரிவித்தார். திறன் மேம்பாட்டின் தூதுவர்களாக மாறுமாறு அவர் அவர்களை வலியுறுத்தினார். கல்விப் பட்டங்களைப் போலவே நடைமுறைத் திறன்களும் முக்கியமானவை என்று அவர் கூறினார்.

சிறப்புத் திறன்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பிரதமர், தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருவதால், இளைஞர்கள் தொடர்ந்து புதிய திறன்களைப் பெற்று, தங்களின் தற்போதைய ஆற்றல்களை மேம்படுத்தி, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

திறன் மேம்பாட்டிற்காக ஒரு தனி அமைச்சகத்தை நிறுவியதன் பின்னணியில் உள்ள நோக்கத்தை பிரதமர் சுட்டிக் காட்டியதோடு, திறன் பயிற்சி நிறுவனங்களின் முக்கியத்துவம் ஐஐடி, ஐஐஎம்-களுக்கு எந்த வகையிலும் குறைவானதல்ல என்றும் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில், திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி, அரசின் உயர்நிலை அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வேர்ல்ட் ஸ்கில்ஸ் எனப்படும் உலகத் திறன் போட்டி, உலகின் முன்னணி சர்வதேச திறன் போட்டியாகும். 48-வது வேர்ல்ட் ஸ்கில்ஸ் போட்டி, ஷாங்காயில் 2026 செப்டம்பர் 22 முதல் 27 வரை நடைபெற்றது. அதில் இந்திய அணி 10-வது இடத்தைப் பிடித்ததுடன், 6 வெள்ளிப் பதக்கங்களையும் 20 சிறப்புப் பதக்கங்களையும் வென்றது. இந்தியா சார்பில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான 70 போட்டியாளர்கள் 63 திறன்களில் பங்கேற்றனர்.

# நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட தென்னாப்பிரிக்காவாழ் தமிழ் வம்சாவளி நவநீதம் பிள்ளைக்கு முதலமைச்சர் வாழ்த்து!



சென்னை 10, அக்டோபர் 2026: 2026 ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட தென்னாப்பிரிக்காவாழ் தமிழ் வம்சாவளி நவநீதம் பிள்ளைக்கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். 'தென்னாப்பிரிக்க மண்ணில் இனவெறிக்கு எதிரான சட்டப் போராட்டத்தின் வழியே தனது பயணத்தைத் தொடங்கி, அந்நாட்டின் உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்தவர் நவநீதம் பிள்ளை; அவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருப்பது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் அளிக்கிறது' என முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது; "சர்வதேச அளவில் மனித உரிமைகளுக்காகவும், உலக அமைதிக்காகவும், நீதிக்காகவும் அயராது குரல் கொடுத்துவருபவரும், தென்னாப்பிரிக்காவாழ் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவருமான நவநீதம் பிள்ளை, 2026-ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாப்பிரிக்க மண்ணில் இனவெறிக்கு எதிரான சட்டப் போராட்டத்தின் வழியே தனது பயணத்தைத் தொடங்கி, அந்நாட்டின் உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையராகவும் பதவி வகித்த நவநீதம் பிள்ளை, அமைதி மற்றும் சர்வதேச சட்டத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட முன்னெடுப்புகளுக்காக அவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருப்பது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் அளிக்கிறது.

மனித உரிமைகள், சமத்துவம், நீதி மற்றும் உலக அமைதி ஆகிய உயரிய விழுமியங்களுக்காக அயராது பாடுபட்டுவரும் நவநீதம் பிள்ளைக்கு மீண்டும் எனது வாழ்த்துகள்" என தெரிவித்துள்ளார்.

# சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ 2026-ல் இந்தியாவின் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்காக சாம்சங் மேடையை அமைக்கிறது

புதுதில்லி 10, அக்டோபர் 2026: பல மாதங்களாக யோசனை உருவாக்கம், வழிகாட்டுதல், முன்மாதிரி உருவாக்கம் மற்றும் வழங்கல் ஆகியவற்றுக்குப் பிறகு, சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ 2026 அக்டோபர் 14 மற்றும் 15 தேதிகளில் புதுடெல்லியில் நடைபெறும் கிராண்ட் ஃபினாலேவுக்குச் செல்லும் நிலையில், இந்தியாவின் இளம் கண்டுபிடிப்பாளர்கள் மைய மேடைக்கு வரத் தயாராகியுள்ளனர். நிஜ உலக சவால்களுக்கான தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை டாப் 20 அணிகள் வழங்கி, வெற்றி பெறும் யோசனைகளை நிஜ உலக தாக்கத்திற்கு நெருக்கமாக்க வடிவமைக்கப்பட்ட மொத்தம் ரூ. 2 கோடி இன்க்யூபேஷன் மானியங்களுக்காகப் போட்டியிடும்.

இறுதிப் போட்டியாளர்கள், ஏஐ லிவ்விங் ஃபார் இந்தியா, ஹெல்த் அண்ட் எஜூகேஷன், னுன்விரான்மென்டல் சஸ்டெயினபிளிட்டி, ஸ்போர்ட் & டெக் என்ற நான்கு கருப்பொருள் அடிப்படையிலான பிரிவுகளில் தங்கள் தீர்வுகளை வழங்குவர். சாம்சங் நிர்வாகத் தலைமை மற்றும் கல்வி, அரசு, தொழில்துறை துறைகளின் நிபுணர்களை உள்ளடக்கிய நடுவர் குழுவின் முன் இந்த வழங்கல் நடைபெறும்.

ஐந்தாவது பதிப்பில் உள்ள சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ 2026, தங்களைச் சுற்றி காணும் பிரச்சினைகளை தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளாக மாற்றும் இந்தியா முழுவதும் உள்ள இளம் கண்டுபிடிப்பாளர்களை ஒன்றிணைக்கிறது. டாப் 20-ல் பங்கேற்பாளர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் டையர் 2 மற்றும் டையர் 3 நகரங்களைச் சேர்ந்தவர்கள்; இறுதிப் போட்டியாளர்கள் 12 மாநிலங்களில் உள்ள 18 நகரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். இது, இந்தியாவின் பாரம்பரிய தொழில்நுட்ப மையங்களுக்கு அப்பால் உள்ள சமூகங்களிலிருந்தும் இளைஞர்கள் தலைமையிலான கண்டுபிடிப்புகள் எழுந்து வருவதை உணர்த்துகிறது.

உலகளாவிய பிரச்சினை தீர்க்கும் தளமான சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ, உலகெங்கும் உள்ள இளைஞர்கள் ஸ்டெம் (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) பயன்படுத்தி சிறந்த எதிர்காலத்தை உருவாக்க உதவுகிறது. பங்கேற்பாளர்கள் தங்கள் சமூகங்களில் உள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தொழில்நுட்ப உதவியுடன் படைப்பாற்றல் மிக்க தீர்வுகளை உருவாக்குகின்றனர்.

பிரச்சினைகளை அடையாளம் கண்டல், டிசைன் திங்கிங்கைப் பயன்படுத்துதல் என்பதிலிருந்து முன்மாதிரிகளை உருவாக்குதல், நிபுணர் வழிகாட்டுதல் பெறுதல் மற்றும் தேசிய அளவில் தங்கள் யோசனைகளை வழங்குதல் வரை பங்கேற்பாளர்களை எடுத்துச் சென்ற பயணத்தின் உச்சக்கட்டமாக கிராண்ட் ஃபினாலே அமைகிறது. தங்கள் தீர்வுகளைத் தொடர்ந்து வளர்த்துக்கொள்ள, சாம்சங்-இடமிருந்து வெற்றி பெறும் நான்கு அணிகளுக்கு மொத்தம் ரூ. 2 கோடி இன்க்யூபேஷன் மானியங்கள் வழங்கப்படும்; அத்துடன் ஐஐடி டெல்லி-யின் எஃப்ஐடிடி-இடமிருந்து நேரடி வழிகாட்டுதலும் கிடைக்கும்.




"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் மக்கள் குரல்
உள்ளது உள்ளபடி



## இந்தோனேசியாவின் கெண்டல் பகுதியில் புதிய உற்பத்தி ஆலை அமைத்து தனது உற்பத்தியை விரிவாக்கம் செய்கிறது கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடெக்ட்!

சென்னை 10, அக்டோபர் 2026: இந்தியாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 'கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடெக்ட் நிறுவனத்தின்' (ஜிசிபிஎல்) துணை நிறுவனமான 'கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடெக்ட் இந்தோனேசியா' (ஜிசிபிஐ), இந்தோனேசியாவில் தனது உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதற்காக கெண்டல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைத்துள்ள புதிய உற்பத்தி ஆலையின் முதற்கட்டத்தை இன்று திறந்து வைத்தது. கெண்டலில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தோனேசிய ரூபாயா (ஐடிஆர்) 500 பில்லியன் (தோராயமாக ரூ.250 கோடி) முதலீட்டின் ஒரு பகுதியாக இத்திட்டம் அமைந்துள்ளது.

இந்த முதலீடு, 2010 முதல் இந்தோனேசியாவில் உள்ள ஜிசிபிஐ-இன் பங்களிப்பை மேலும் வலுப்படுத்துகிறது. அன்றிலிருந்து இன்றுவரை, இந்நிறுவனத்தின் வணிகம் 4.5 மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது. மேலும் HIT, Stella, Mitu மற்றும் NYU உள்ளிட்ட இதன் பிராண்டுகள் தோராயமாக 4-ல் 1 இந்தோனேசியக் குடும்பத்தைச் சென்றடைந்துள்ளன. கெண்டலில் ஜிசிபிஐ-க்கு சொந்தமான 5.5 ஹெக்டேர் நிலத்தில், 2.5 ஹெக்டேர் பரப்பளவில் இந்த முதற்கட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது வீட்டு உபயோகப் பூச்சிக்கொல்லி தயாரிப்புகளுக்காக (Household Insecticides) அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது இந்தோனேசியச் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் ஜிசிபிஐ-இன் உற்பத்தித் திறனை மேலும் வலுப்படுத்துகிறது.

இந்த திறப்பு விழாவில் இந்தோனேசியாவிற்கான இந்தியத் தூதர், மத்திய ஜாவா மாகாணத்தின் துணை ஆளுநர், கெண்டல் பிராந்தியத் தலைவர் மற்றும் இந்தோனேசியாவின் முதலீடு மற்றும் கீழ்நிலைத் துறை அமைச்சகத்தின் (பிகேபிஎம்) மூத்த பிரதிநிதி ஆகியோருடன் ஜிசிபிஎல் மற்றும் ஜிசிபிஐ நிறுவனங்களின் முக்கியப் பங்குதாரர்கள், கூட்டாளர்கள் மற்றும் மூத்த தலைவர்கள் கலந்துகொண்டனர். இது இந்தோனேசியாவில் முதலீடு, உள்ளூர் பொருளாதார வளர்ச்சி மற்றும் நீண்டகால வளர்ச்சி ஆகியவற்றின் கூட்டு முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது.

"இந்தியாவும் இந்தோனேசியாவும் ஆழமான வரலாற்று மற்றும் பண்பாட்டுத் தொடர்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன; அதேவேளையில், இரு நாடுகளுக்கும் இடையே வலுவான பொருளாதாரக் கூட்டாண்மையை உருவாக்குவதற்கான அளப்பரிய சாத்தியக்கூறுகளும் உள்ளன. இந்தியாவின் மிக முக்கிய வணிகக் குழுமங்களில் ஒன்றான கோத்ரேஜ், 2010 முதல் இந்தோனேசியாவில் தனது சேவையை வழங்கி வருகிறது. இதன் தயாரிப்புகள் தரம் மற்றும் மலிவான விலையின் காரணமாக இந்தோனேசியச் சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. கெண்டலில் அமைக்கப்பட்டுள்ள இதன் புதிய உற்பத்தி ஆலை, இந்த வணிகக் கூட்டாண்மை செயல்பாட்டில் இருப்பதற்கான ஒரு தெளிவான உதாரணம். இந்த ஆலை இந்தோனேசிய சந்தை மற்றும் ஏற்றுமதி சந்தைகள் ஆகிய இரண்டிற்கும் பயன்படும் வகையில் அமையும்;

மேலும் முதலீடு, உற்பத்தி மற்றும் வர்த்தகத்திற்கு இடையிலான பிணைப்பை வலுப்படுத்தும். இந்திய மற்றும் இந்தோனேசிய நிறுவனங்கள் இணைந்து முதலீடு செய்து, வளர்ச்சி கண்டு, மதிப்புக்கூட்டும் இது போன்ற பல எடுத்துக்காட்டுகளை நாங்கள் காண விரும்புகிறோம்" என்று இந்தோனேசியாவிற்கான இந்தியத் தூதர் சந்தீப் சக்ரவர்த்தி தெரிவித்துள்ளார்.

## 174 பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய இந்திய விமானிக்கு இஸ்ரேல் உயரிய விருது

சென்னை 10, அக்டோபர் 2026: நடுவானில் நடந்த தீவிரவாத சதித்திட்டத்தை முறியடித்து 174 பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய இந்திய விமானி ஸ்மித் மச்சாருக்கு இஸ்ரேலின் உயரிய வீரதீர விருது அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் துபாயில் இருந்து இஸ்ரேல் நாட்டின் டெல் அவிவ் நகருக்கு 174 பயணிகளுடன் சென்ற ஃபிளை துபாய் நிறுவனத்தின் விமானம், 34,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது ஓமன் நாட்டைச் சேர்ந்த துணை விமானி ஹமாம் அல்-ஹம்மாமி என்பவர் கட்டுப்பாட்டு அறைக்குள் புகுந்து அவசரகால கோடரியால் இந்திய தலைமை விமானி ஸ்மித் மச்சாரை கொடூரமாக தாக்கினார்.

இதனால் விமானம் நடுவானில் 17,000 அடிக்கும் மேல் மிக வேகமாக கீழ்நோக்கி சரிந்து பேராபத்தை எதிர்நோக்கியது. அப்போது பலத்த ரத்த காயங்களுடன் மரணப் போராட்டம் நடத்திய நிலையிலும், இந்திய கேப்டன் ஸ்மித் மச்சார் மன உறுதியோடு செயல்பட்டு விமானத்தை சவூதி அரேபியாவில் பத்திரமாக தரையிறக்கி அனைத்து பயணிகளையும் காப்பாற்றினார். இந்த கோரத் தாக்குதலை தடுத்து நிறுத்திய 6 இஸ்ரேல் பயணிகளுக்கு அந்நாட்டு அதிபர் ஐசக் ஹெர்சாக் ஜெருசலேமில் நேற்று விருது வழங்கி கவுரவித்தார். அப்போது அபுதாபி மருத்துவமனையில்



சிகிச்சை பெற்று வரும் இந்திய விமானி ஸ்மித் மச்சாருக்கும் நாட்டின் உயரிய குடிமக்கள் வீரதீர விருது வழங்கப்படும் என அதிகாரப்பூர்வமாக அதிபர் ஐசக் ஹெர்சாக் அறிவித்தார்.

அப்போது அவர் பேசுகையில், 'கேப்டன் ஸ்மித் மச்சாரின் அசாத்திய துணிச்சலும், தொழில்முறையும் தான் இந்த மாபெரும் வான்வழி பேரழிவை தடுத்து நிறுத்தியது. அவர் உடல்நலம் தேறியதும் இஸ்ரேல் மக்களின் சார்பாக இந்த விருதை நேரில் வழங்குவது எனக்கு பெருமை அளிக்கும்' என்று புகழாரம் சூட்டினார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## தமிழகத்தை சேர்ந்த இளம் கராத்தே வீரர்கள் இந்திய- இலங்கை ஓபன் கராத்தே சாம்பியன்ஷிப் 2026 போட்டியில் 32 பதக்கங்களை வென்று சாதனை!

சென்னை 10, அக்டோபர் 2026: கோவாவில் அக்டோபர் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இந்தியா-இலங்கை ஓப்பன் கராத்தே சாம்பியன்ஷிப் 2026 போட்டியில் சென்னை, திருவண்ணாமலை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த இளம் கராத்தே வீரர்கள் சிறப்பாக விளையாடி, தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையில் மொத்தம் 32 பதக்கங்களை வென்றுள்ளனர்.

தமிழ்நாடு அணியினர் பல்வேறு வயது மற்றும் எடைப் பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு 15 தங்கப் பதக்கங்கள், 9 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 8 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 32 பதக்கங்களை கைப்பற்றினர். போட்டியில் தனிநபர் கட்டா, தனிநபர் குமித்தே, குழு கட்டா மற்றும் குழு குமித்தே உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் வீரர்கள் பங்கேற்று தங்களது திறமை, ஒழுக்கம் மற்றும் விடாமுயற்சியை வெளிப்படுத்தினர்.

இளம் வீரர்கள் மேற்கொண்ட தொடர் பயிற்சி மற்றும் கடின உழைப்புக்கு கிடைத்த வெற்றியே இந்த சாதனையின் அடித்தளம். மேலும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த பயிற்சியாளர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஆதரவும் இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.




மொத்தம் 32 பதக்கங்களில் 15 தங்கப் பதக்கங்கள், 9 வெள்ளி மற்றும் 8 வெண்கலப் பதக்கங்களையும் வென்ற தமிழக அணியினர் கடந்த அக்டோபர் 6 ஆம் தேதி சென்னை திரும்பினர். மாநிலம் முழுவதும் இளம் வீரர்களிடையே கராத்தே விளையாட்டின் மீதான ஆர்வம் அதிகரித்து வருவதை இந்த வெற்றி வெளிப்படுத்துகிறது.

இந்தச் சாதனையில் குறிப்பிடும்படியாக, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளான மேஹா மித்ரா மற்றும் மகிழ் மித்ரா ஆகியோர் தலா 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர். இருவரும் இணைந்து 4 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றி தமிழக அணியின் வெற்றிக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளனர். இளம் கராத்தே வீரர்களின் இந்தப் பதக்க வேட்டை, தமிழக விளையாட்டுத் துறைக்கு மேலும் உற்சாகமளிக்கும் வெற்றியாக அமைந்துள்ளது.

## அட்லாண்டா இந்தியத் திரைப்பட விழாவில் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதை வென்ற 'என்ன விலை' திரைப்படம்!

சென்னை 10, அக்டோபர் 2026: நடிகர்கள் கருணாஸ், நிமிஷா சஜயன் நடிப்பில் வெளியான 'என்ன விலை' திரைப்படம் அட்லாண்டா இந்தியத் திரைப்பட விழாவில் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதை வென்றுள்ளது. இப்படத்தின் ஒளிப்பதிவாளர் ஆல்பி ஆண்டனிக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 3ஆம் தேதி நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், ஆல்பி ஆண்டனி சார்பில் இப்படத்தின் தயாரிப்பாளர் அனுகோபால் வேணுகோபாலன் விருதைப் பெற்றுக் கொண்டார்.

தேசிய விருது பெற்ற இயக்குநர் சஜீவ் பாழூர் இயக்கியுள்ள 'என்ன விலை' திரைப்படத்தில் கருணாஸ், நிமிஷா சஜயன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். கடலோரப் பகுதியான ராமேஸ்வரத்தைப் பின்னணியாகக் கொண்டு உருவாகியுள்ள இப்படம், எதிர்பாராத திருப்பத்தைச் சந்திக்கும் ஒரு மீனவரின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது. நீதி, கண்ணியம் மற்றும் மன உறுதி ஆகியவற்றையும் படம் பேசியது.

சர்வதேசத் திரைப்பட விழாக்களில் 'என்ன விலை' திரைப்படத்தின் பயணத்தில் மேலும் ஒரு மைல் கல்லாக இந்த விருது அமைந்துள்ளது. மேலும், தமிழ் சினிமாவை உலக அரங்கிற்குக் கொண்டு செல்லும் கலாமயா சினிவெர்ஸின் முயற்சியில் இது முக்கியமான சாதனை.

விருது குறித்து ஒளிப்பதிவாளர் ஆல்பி ஆண்டனி பகிர்ந்து கொண்டதாவது, "அட்லாண்டா இந்தியத் திரைப்பட விழாவில் சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதைப் பெறுவது எனக்கு பெருமையான தருணம். 'என்ன விலை' திரைப்படம் அதன் கதைக் களத்துடனும் கதாபாத்திரங்களுடனும் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. அந்த உலகத்தை காட்சிகளாக மாற்றும் வாய்ப்பு கிடைத்தது எனக்குப் பெரும் பாக்கியம். இந்தப் பெருமையை இயக்குநர் சஜீவ் பாழூர், தயாரிப்பாளர்கள் ஜித்தேஷ் விஸ்வம்பரன் மற்றும் அனுகோபால் வேணுகோபாலன் உள்ளிட்ட ஒட்டுமொத்த படக்குழுவினருடனும் பகிர்ந்து கொள்கிறேன்" என்றார்.




படத்தின் தயாரிப்பாளர்களான ஜித்தேஷ் விஸ்வம்பரன் மற்றும் அனுகோபால் வேணுகோபாலன் பகிர்ந்து கொண்டதாவது, "ஆல்பி ஆண்டனியின் ஒளிப்பதிவுக்குக் கிடைத்துள்ள இந்தச் சர்வதேச அங்கீகாரம், 'என்ன விலை' படக் குழுவினர் அனைவருக்கும் மிகுந்த பெருமையை அளிக்கிறது.

படத்தின் காட்சிமொழிக்கும், படக் குழுவினரின் உழைப்புக்கும் கிடைத்த அங்கீகாரமாக இந்த விருதை பார்க்கிறோம்" என்றனர்.

## யோகி பாபு நடிக்கும் 'சிங்காரம்' திரைப்படம் அக்டோபர் 30-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியீடு!

சென்னை 10, அக்டோபர் 2026: 'ராஜவம்சம்' படத்தை இயக்கிய கே.வி. கதிர்வேலு இயக்கத்தில், சாம் சி.எஸ். இசையமைப்பில் உருவாகியுள்ள நகைச்சுவை மற்றும் குடும்ப உணர்வுகள் நிறைந்த திரைப்படம் 'சிங்காரம்'. ராக் புரொடக்ஷன் நிறுவனத்தின் சார்பில் ஏ.எஸ். ரமண பாலாஜி மற்றும் பத்மாவதி காந்தி இணைந்து தயாரித்துள்ள இப்படம், வரும் அக்டோபர் 30, 2026 அன்று உலகெங்கும் உள்ள திரையரங்குகளில் வெளியாகிறது.




தமிழ் திரையுலகில் தனது தனித்துவமான நகைச்சுவை நடிப்பால் ரசிகர்களைக் கவர்ந்து வரும் யோகி பாபு, இப்படத்தில் கதையின் நாயகனாக நடித்துள்ளார். அவருடன் வேல ராமமூர்த்தி, எம்.எஸ். பாஸ்கர், மரியா வின்சென்ட், சார்ம்ஸ், ஆர்த்தி கணேஷ், மனோபாலா, கல்கி, மாரிமுத்து, படவா கோபி, சென்ட்ராயன், டி.எஸ்.ஆர்., தீபா சங்கர், சபிதா ராய், ஜாவா சுந்தரேசன், கே.எம். கணேஷ்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்தில், நரிக்குறவர் சமுதாயத்தை சேர்ந்த யோகிபாபு, தனக்கு எதிராக நிலவும் அடக்குமுறைகளையும் வாழ்க்கைச் சவால்களையும் எதிர்கொண்டு, தனது வாழ்க்கையைத் தானே தீர்மானிக்கும் துணிச்சலைப் பெறுவதே இப்படத்தின் மையக் கருவாக அமைந்துள்ளது. தனது உரிமையையும் சுயமரியாதையையும் நிலைநாட்டப் போராடும் ஒரு மனிதனின் பயணத்தை, நகைச்சுவையும் உணர்வுபூர்வமான தருணங்களும் இணைந்த திரைக்கதையின் வழியாக இப்படம் எடுத்துரைக்கிறது. அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவற்றைக் கடந்து முன்னேறுவதற்கான மன உறுதியையும் மையப்படுத்தி, பொழுதுபோக்குடன் கூடிய கருத்தையும் பார்வையாளர்களுக்கு வழங்கும் வகையில் 'சிங்காரம்' உருவாகியுள்ளது.

'ராஜவம்சம்' படத்தின் மூலம் கவனம் பெற்ற இயக்குநர் கே.வி. கதிர்வேலு, இப்படத்தை இயக்கியுள்ளார். யோகி பாபுவுடன் அனுபவமிக்க நடிகர்கள் இணைந்திருப்பது படத்தின் சிறப்பம்சமாகும். நகைச்சுவை, குடும்ப உணர்வுகள் மற்றும் வாழ்க்கையை எதிர்கொள்ளும் மன உறுதி ஆகிய அம்சங்களை ஒருங்கிணைத்து, அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவரும் வகையில் இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படத்திற்கு பிரசன்னா எஸ். குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார். லாரன்ஸ் கிஷோர் படத்தொகுப்பையும், குருராஜ் கலை இயக்கத்தையும் கவனித்துள்ளனர். அனுபவமிக்க தொழில்நுட்பக் கலைஞர்களின் பங்களிப்பில் உருவாகியுள்ள 'சிங்காரம்', நகைச்சுவையும் உணர்வுகளும் நிறைந்த ஒரு சுவாரஸ்யமான திரையரங்க அனுபவத்தை வழங்கத் தயாராகி வருகிறது.

நடிகர்கள் :

யோகி பாபு, வேல ராமமூர்த்தி, எம்.எஸ். பாஸ்கர், மரியா வின்சென்ட், சார்ம்ஸ், ஆர்த்தி கணேஷ், மனோபாலா, கல்கி, மாரிமுத்து, படவா கோபி, சென்ட்ராயன், டி.எஸ்.ஆர்., தீபா சங்கர், சபிதா ராய், ஜாவா சுந்தரேசன், கே.எம். கணேஷ்கர் மற்றும் பலர்.

தொழில்நுட்பக் கலைஞர்கள்:

இயக்கம் : கே.வி. கதிர்வேலு, தயாரிப்பாளர்கள்:ஏ.எஸ். ரமண பாலாஜி, பத்மாவதி காந்தி, தயாரிப்பு நிறுவனம்: ராக் புரொடக்ஷன், இசை: சாம் சி.எஸ்., ஒளிப்பதிவு: பிரசன்னா எஸ். குமார், படத்தொகுப்பு: லாரன்ஸ் கிஷோர், கலை இயக்கம்: குருராஜ், மக்கள் தொடர்பு: ரியாஸ் கே அஹ்மத், பாரஸ் ரியாஸ்.

## சிட்லிங்கியின் மருத்துவப் புரட்சியைப் பதிவு செய்யும் ஆவணப்படம் 'தி வேலி ஆஃப் ஹெல்த்'!



சென்னை 10, அக்டோபர் 2026: நாம் இதுவரை அதிகம் அறிந்திடாத உண்மையை திரையில் கொண்டு வரும் திரைப்படங்கள் உலகைப் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்துகின்றன. இயக்குநரும் எழுத்தாளருமான சங்கர நாராயணன் இயக்கியுள்ள 'தி வேலி ஆஃப் ஹெல்த்' திரைப்படமும் அத்தகைய படைப்புகளில் ஒன்று. தமிழ்நாட்டின் தொலைதூர வனப்பகுதியில் அமைந்துள்ள சிட்லிங்கி பள்ளத்தாக்கை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது இந்த ஆவணப் படம். அப்பகுதியில் நிகழ்ந்த அசாதாரணமான மருத்துவ மற்றும் சமூக மாற்றத்தைப் பதிவு செய்கிறது. 2026ஆம் ஆண்டுக்கான 18வது சர்வதேச கேரள ஆவணப்படம் மற்றும் குறும்படத் திருவிழாவில் (ஐடிஎஸ்எஃப்எஃப்கே) இந்தத் திரைப்படம் அதிகாரப்பூர்வமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தொலைதூர வனப் பகுதியான சிட்லிங்கியைப் பின்னணியாகக் கொண்ட இப்படம், 1990களில் அங்கு வாழ்ந்த பழங்குடியின மக்கள் எதிர்கொண்ட மருத்துவ நெருக்கடிகளையும், அதைத் தொடர்ந்து இரண்டு மருத்துவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து 1993 ஆம் ஆண்டு 'Tribal Health Initiative' (THI) என்ற அமைப்பைத் தொடங்கியதன் மூலம் ஏற்பட்ட மாற்றங்களையும் பதிவு செய்கிறது. மிகச் சிறிய அளவில் தொடங்கிய அந்த மருத்துவ முயற்சி, படிப்படியாக 25-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வழங்கும் சமூகப் பங்களிப்புடன் கூடிய அமைப்பாக வளர்ந்தது. இதன் மூலம் பல தலைமுறைகளைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையிலும் மாற்றம் ஏற்பட்டது.

பழங்குடியின மக்களின் வாழ்க்கையில் பொதுவெளி கவனத்துக்கு வராமல் போகும் பல்வேறு யதார்த்தங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பாகவும் இந்தத் திரைப்படம் அமைந்துள்ளது என்கிறார் இயக்குநர் சங்கர நாராயணன். 'தி வேலி ஆஃப் ஹெல்த்' ஆவணப்படம் மூலம் மருத்துவம், கண்ணியம், சமூகப் பங்கேற்பு மற்றும் நிலையான மாற்றம் ஆகியவற்றை பேசியுள்ளார்.

திரைப்படம் குறித்து இயக்குநர் சங்கர நாராயணன் பகிர்ந்து கொண்டதாவது, "பழங்குடியின சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதில் எனக்கு எப்போதும் ஆர்வம் உண்டு. போதிய மருத்துவ வசதிகள் இல்லாமல் அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும், மருத்துவ உதவியைப் பெறுவதில் அவர்கள் சந்திக்கும் தடைகளையும் உலகம் அறிய வேண்டும் என்று நினைத்தேன். மருத்துவம் நாளுக்கு நாள் வணிகமயமாகி வரும் இந்தக் காலகட்டத்தில், தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தாங்களே தீர்வு காண முன்வந்த ஒரு பள்ளத்தாக்கின் கதை, மிகவும் அவசியமான மாற்றுப் பார்வையை முன்வைக்கிறது. இது அனைவருக்கும் பொதுவான ஒரு பிரச்சினையைப் பேசுகிறது. அதே நேரத்தில், எது தவறாக உள்ளது என்பதை மட்டும் சுட்டிக்காட்டாமல், அதற்கான தீர்வையும் இந்தப் படம் முன்வைக்கிறது. இந்தக் கதையைத் தேர்வு செய்ய என்னைத் தூண்டிய முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று.

இந்தப் பயணம் முழுவதும் எனக்கு உறுதுணையாக இருந்த என் மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு நன்றி. படத்தைப் பார்த்த பலரும் பாராட்டி வருகின்றனர். இந்த பாராட்டுகள் எனக்குப் பொறுப்புணர்வை அதிகரித்துள்ளது. மேலும், இதுபோன்ற கதைகளை உலகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற எனது எண்ணத்தையும் வலுப்படுத்தியுள்ளது" என்றார்.

'தி வேலி ஆஃப் ஹெல்த்' என்பது மருத்துவ முயற்சியைப் பற்றிய திரைப்படம் மட்டுமல்ல. ஒரு சமூகத்திற்கு தனது சொந்த வாழ்க்கைச் சூழலை மாற்றுவதில் பங்கேற்கும் வாய்ப்பும் நம்பிக்கையும் வழங்கப்படும் போது, எத்தகைய மாற்றங்கள் சாத்தியமாகின்றன என்பதைக் கூறும் கதையாகவும் இது அமைந்துள்ளது. சிட்லிங்கியின் பயணம் ஒரு எளிமையான, அதே நேரத்தில் வலிமையான செய்தியை முன்வைக்கிறது: சில நேரங்களில், மிகப் பெரிய மாற்றங்கள் அமைதியாகவே தொடங்குகின்றன; ஒருவர் மீது ஒருவர் அக்கறை செலுத்தத் தொடங்கும் மக்களிடமிருந்தே அந்த மாற்றங்கள் பிறக்கின்றன.

## வடக்கு கடற்கரை பகுதியில் ஒருவரிடம் வீண் தகராறு செய்து மதுபாட்டிலால் தாக்கிய வழக்கில் 2 நபர்கள் கைது

சென்னை 10, அக்டோபர் 2026: சென்னை, கிளைவ் பேட்டரி பகுதியில் வசித்து வரும் நரேஷ், வ/22, என்பவர் கூலி வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 08.10.2026 அன்று அதிகாலை, வேலை முடித்துவிட்டு, அசதியாக இருந்ததால், வடக்குகடற்கரை, இராஜாஜி சாலை, ஜாபர்சாரங் தெருவில் ஒரு டிபன் கடை அருகே சாலையோரமாக உட்கார்ந்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த 3 நபர்கள் மேற்படி நரேஷை பார்த்து, "எதற்காக எங்கள் ஏரியாவில் உட்கார்ந்து இருக்கிறாய்?" என்று கேட்டு, தகாத வார்த்தைகள் பேசி, வீண் தகராறு செய்து, கையாலும், மதுபாட்டிலாலும் நரேஷை தாக்கிவிட்டு, 3 நபர்களும் கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், தாக்குதலில் இரத்த காயமடைந்த நரேஷ், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவத்தில் தன்னிடம் வீண் தகராறு செய்து தாக்கிய 3 நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் நரேஷ் என்பவர் பி-1 வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

பி-1 வடக்கு கடற்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத் தில் ஈடுபட்ட எதிரிகள் 1.முருகவேல், வ/21, கோபால் செட்டி தெரு, 4வது கடற்கரை சாலை, சென்னை, 2.அருண் குமார், வ/26, மண்ணடி தெரு, சென்னை ஆகிய 2 நபர்களை நேற்று (08.10.2026) கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவர் மீதும் ஏற்கனவே தலா 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (08.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## கோயம்பேடு பகுதியில் கடையில் குளிர்பானம் அருந்திவிட்டு, பணம் தராமல் வயதான கடை உரிமையாளரை தாக்கிய நபர் கைது

சென்னை 10, அக்டோபர் 2026: மோகன், வ/68, த/பெ. ரங்கசாமி என்பவர் சென்னை, கோயம்பேடு, நியூ காலனி பகுதியில் குளிர்பான கடை நடத்தி வருவதாகவும், கடந்த 07.10.2026 அன்று இரவு மோகன் கடையில் இருந்த போது, அங்கு வந்த அறிமுகமில்லாத நபர் குளிர்பானம் கேட்டு அருந்திவிட்டு பணம் தராமல் சென்றபோது? மோகன் அவரிடம் குளிர்பானத்திற்கான பணம் கேட்டதாகவும், அதற்கு அந்த நபர் "என்னிடமே பணம் கேட்கிறாயா?" எனக் கூறி தகாத வார்த்தைகளால் பேசி, மோகனை கையால் தாக்கி, அருகிலிருந்த மர ஸ்டூலால் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும், மேற்படி சம்பவத்தில் தன்னை தாக்கி கொலை மிரட்டல் விடுத்த நபர் மீது நடவடிக்கை எடுக்கும்படி மோகன் என்பவர் கே-11 சிஎம்பிடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

கே-11 சிஎம்பிடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி தினேஷ், வ/25, குறிஞ்சிப்பாடி தாலுகா, நெய்வேலி, கடலூர் மாவட்டம் என்பவரை நேற்று முன்தினம் (08.10.2026) கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி தினேஷ் தனியார் ஆம்புலன்ஸ் நிறுவனத்தில் ஓட்டுநராக வேலை செய்து வருவது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி தினேஷ் விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (08.10.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.